

Kombai S. Anwar




# சொல்ல மறந்த சொந்தங்களின் கதை

▶▶ பீர் முஹம்மது

இறைவனுக்கு முழுமையாக சரணடையும் இஸ்லாம் என்ற மார்க்கத்தை, தமது வாழ்வியலாக ஏற்றுக்கொண்ட தமிழ்நாட்டு மக்களின் வரலாறு, அங்கொன்றும் இங் கொன்றுமாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. தமிழி லும், ஆங்கிலத்திலும் நூல் வடிவில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வரலாற்று ஆவணம் என்று பார்க்கும்போது, புலவர் செ.ராசு, கு.ஜமால் முகமதுவின் உதவியுடன் தொகுத்த 'தமிழக இஸ்லாமிய வரலாற்று ஆவணங்கள்' முஸ்லிம் கள் இந்த மண்ணின் மைந்தர்களாக, எல்லா சமூகங்க ளுடனும் உறவுகளைப் பேணி வளர்த்த கடந்த காலத் தைக் கல்வெட்டுகளிலிருந்தும் செப்பேடுகளிலிருந்தும் பதிவு செய்திருக்கிறது.

சொல் ஆய்வுகளின் அடிப்படையில் ம.சோ. விக்டர் எழுதிய 'இசுலாம்-தமிழர் சமயம்' என்ற நூலும் முஸ் லிம்களைப் பற்றி பல்வேறு தமிழ் ஊடகங்கள் வாயி லாக வெளிப்பட்டுவரும் தவறான சித்திரங்களைக் கலைத்துப்போடுவதாக இருந்தது. விக்டர் தமிழ்ச் சமூகத்தின் நன்றிக்குரியவர்.

தமிழ்ச்சமூகத்திற்கு இப்போது இன்னுமொரு முக்கிய மான வரலாற்று ஆவணம் காணொளி வடிவில் கிடைத் திருக்கிறது. கோம்பையைச் சேர்ந்த ஒளிப்பதிவாளரும் வரலாற்றாளருமான சையத் அன்வர் இயக்கிய 'யாதும்' என்கிற ஐம்பது நிமிட ஆவணப்படம், இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்றுக்கொண்டிருக்கும் லட்சக்கணக் கான தமிழ்நாட்டு மக்களின் வரலாற்றை சிறப்பாகப் படம்பிடித்திருக்கிறது.

பல்வேறு சமூகங்கள் தத்தமது நம்பிக்கைகளுக்குட் பட்டு தனித்துவமான பண்பாட்டு வாழ்வை மேற் கொண்டாலும், அவர்களது அன்றாட வாழ்வில் பிற சமூகங்களுடனான உறவு என்பது செழுமை நிறைந்த தாக இருக்கிறது. இந்த உறவு, வரலாறு நெடுக நீடித்து வந்திருக்கிறது. ஆனால், இந்த உறவின் கதையைச் சொல்கிறவர்களைவிட, சமூகங்களுக்கிடையே பகை மூட்டி லாபம் சேர்க்கிறவர்களின் எண்ணிக்கை நமது தேசத்தில் இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னணியில், ஆங்கிலத்திலும், தமிழிலும் தயாராகியிருக்கும் அன்வரின் படைப்பு முக்கியத்து வம் பெறுகிறது.

சமூகங்களின் பழக்கவழக்கங்கள் மறைபொருளாக இருக்கும் வரையில்தான் அது குறித்த தவறான கதை யாடல்கள் நம்பகத்தன்மை பெறுகின்றன. தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கை சார்ந்த தொழுகை, அவர்களது பள்ளிவாசல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள கட்டடக்கலை ஆகியவை பற்றிய ஆராய்ச்சிபூர்வமான காட்சிப்படுத்தல்கள், வரலாற்று நிபுணர்கள் தரும் தகவல்கள், செப்பேடுகள் போன்ற ஆதாரங்கள் வழங் கும் செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்திருக்கும் தன்மை இந்த ஆவணப்படத்தின் பலம்.

பார்வையாளரை பள்ளிவாசலுக்குள்ளும், மதரஸாவுக் குள்ளும் அழைத்துச் செல்லும் 'கதை சொல்லி'யாக அன்வர் இந்தப் படத்தில் பயணிக்கிறார். தமிழ்நாட்டின் கிழக்குக் கடலோரம் முழுக்க பயணிக்கும் கேமரா, அதன் மூலமாக இந்தத் தமிழ் மண்ணோடு இரண்டறக் கலந்துவிட்ட முஸ்லிம் சமூகத்தின் தொன்மத்தைச் சொல்லிச் செல்கிறது.




நறுமணப் பயிர்கள், காலம் காலமாக உலக நாடுகள் தென்இந்திய மக்களுடன்வணிக உறவுகளைக் கொண்டிருக்கக் காரணமாக இருந்தன. நறுமணப் பயிர்களின் பாதை கடல் வழியிலானதாக இருந்தது. அந்த வணிக உறவுகள் புதிய சிந்தனைகளையும் தொழில்நுட்பங்களையும் கொண்டு சேர்த்தன.

நறுமணப் பயிர்கள் உலக சந்தையோடு நம்மை இணைத்தபோது, மனிதகுலத்திற்குப் பொதுவான இறைநம்பிக்கை சார்ந்த கருத்துப் பரிமாற்றங்களும் நடந்தன. கேரளகடலோரத்திற்கு கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே இஸ்லாமிய ஏகத்துவ இறையியல் தத்துவம் கடல் வணிகர்கள் மூலம் வந்து சேர்ந்தது. அந்தத் தத்துவத்தைத் தெரிந்துகொண்ட சித்தர்கள் போன்ற இறை நேசர்கள், அதனை மக்கள் மயப்படுத்தியதையும் சொல்லாமல் சொல்லிச் செல்கிறது, இந்தக் காட்சி ஆவணம்.

தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கையிலும் பண்பாட்டிலும் இருக்கும் தனித்துவம், ஏனைய சமூகங்களின் நம்பிக்கைகளையும் பண்பாடுகளையும் மதிப்பதற்கு எப்போதுமே தடையாக இருக்கவில்லை என்பதை காணொளி சாட்சிகளுடன் பதிவு செய்துள்ளார்.

தமிழ்மொழிக்கு முஸ்லிம் சமூகம் செய்த பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை, 16 ஆவது நூற்றாண்டில் 'ஆயிரம் மசாலா புராணம்' மதுரை தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறிய கதை வாயிலாகச் சொல்கிறார், இயக்குநர் அன்வர். சீறா அபுபக்கர், கர்நாடக இசை வடிவங்களில் பாடும் காட்சிகளும் இந்த ஆவணப் படத்தின் வீச்சை விளக்குவதாக அமைந்திருக்கின்றன.

இந்த ஆவணப் படத்தைப் பார்த்த மூத்த செய்தியாளர் A.S. பன்னீர்செல்வம், ''முப்பதாண்டுகளுக்கு மேலாக நான் செய்தியாளராக இருந்திருக்கிறேன். எனக்கு அருகிலேயே வாழுகிற முஸ்லிம் மக்களது பன்முகப் பரிமாணம், இந்தப் படத்தைப் பார்க்கும் வரையில் எனக்கு முழுமையாகப் பிடிபடவில்லை'' என்று இந்தப் படத்தின் திரையிடல் நிகழ்வு ஒன்றில் சொன்னார்.

அண்டை வீட்டாரைக்கூட தெரியாமலோ, புரியாமலோ பலரும் ஓடிக்கொண்டிருக்கிற உலகில், இந்தப் படத்திற்காக ஐம்பது நிமிடம் செலவிட்டது வெவ்வேறு சமூகங்களைச் சார்ந்த செய்தியாளர்களுக்கும் சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி பிரபா ஸ்ரீதேவனுக்கும் புதிய தரிசனங்களைத் தந்திருக்கிறது. (அவற்றைக் காண்பதற்கு: http://yaadhum.com இணையதளத்திற்குச் செல்லுங்கள்). அதற்கு முக்கியமான காரணம், அன்வரால் படம் மூலம் கதை சொல்ல முடிந்திருக்கிறது என்பதுதான்.

இது ஒரு சாலைவழிப் படம் (Road Movie) என்று திஹிந்து ஆங்கில நாளிதழின் பரத்வாஜ் ரங்கன் சொல்லியிருக்கிறார். இந்தப் பயணம், தமிழ் பேசும் முஸ்லிம்களைப் பற்றி இதே அளவுக்கு காத்திரமான இன்னும் இரண்டு ஆவணப்படங்களைத் தரும் என்று அன்வர் நம்புகிறார். அந்தப் பயணத்திற்கு தமிழ்ச் சமூகம் துணை நிற்க வேண்டும். ■

*(பின் குறிப்பு:* இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, செய்தியாளர் பீர் முகமதுவால் முகநூலில் எழுதப்பட்ட குறிப்புகள். நமது வேண்டுகோளுக்கிணங்க சமநிலை வாசகர்களுக்காக அவரால் விரிவாக்கப்பட்ட பதிவு).